உள்சுற்றிற்கு மட்டும்:

# இன்றைய நிலைமையும் எதிர்காலத் திசை மார்க்கமும்

மத்திய குழு சார்பாக
செயலாளர் நாயகம்
தோழர் **க. பத்மநாபா**

**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி**
**(EPRLF)**

*என்றும் என் இனிய தோழர்களே !*

*புரட்சிகர வணக்கங்கள் !!*

## இன்றைய நிலைமையும் எதிர்காலத் திசை மார்க்கமும்

ராஜீவ் - ஜே.ஆர் ஒப்பந்தம் கைச்சாத்தான பிறகு எமது எதிர் காலக் கடமைகள் எவ்வாறு அமையப் போகின்றன என்ற நியாயமான கேள்வி எழுவது இயல்பானதே.

ஈழதேச மக்களின் சுயநிர்ணய உரிமை, பாரம்பரிய பிரதேச உரிமை, தேசிய இனம் ஆகிய முக்கிய விடயங்கள் அங்கீகரிக்கப்படாத நிலையில் இவ் ஒப்பந்தம் எதைச் சாதிக்கப் போகிறது என்பதும் சந்தேகத்திற்கிடமான ஒன்றே. ஏனெனில் இதுவரையிலான ஒப்பந்த வரலாற்றில் ஏதாவது நிறை வேற்றப்பட்டதற்கு வரலாற்று ஆதாரங்கள் எதுவுமில்லை.

ஏன், ஈழதேச மக்களின் மிக அடிப்படையான பிரச்சனை களுக்குக் கூட இவ் ஒப்பந்தத்தில் உறுதியான தீர்வு எதுவும் இல்லை. இராணுவ முகாம்களை அப்புறப் படுத்துதல், காணிக் குடியேற்றம் போன்ற விடயங்களில் தெளிவாக எதுவும் முன் வைக்கப்படவில்லை.

## ஒப்பந்தத்தை ஏன் ஏற்றுக் கொண்டோம் :

அவ்வாறுனல் ஏன் இவ் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டீர் கள் என்ற கேள்வி உங்களிடமிருந்து எழுவதும் இயல்பானதே. கடந்த 4 வருட யுத்தத்தில் இறுதி ஒன்றரை வருடமும் அரசுக் கெதிரான போராட்டம் முடமாக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஏனைய விடுதலை இயக்கங்களை அழித் தொழிக்கும் வேலையில் இறங்கியதால் இச்சந்தர்ப்பத்தைப் பாவித்து அரசு தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கும், ஈழதேச மக்களுக்கெதிராக பரரிய வெற்றிகரமான தாக்குதல்களை நடத்துவதற்கும் வாய்ப்பாக அமைந்துவிட்டது. மறுபக்கத் தில் அர்த்தமில்லாத உயிர்த்தியாகமும், அழிவுகளும், சேதாரங் களும் மக்கள் மத்தியில் அவநம்பிக்கை வாதத்தைத் தோற்று

வித்தது. இதன் தொடர்ச்சியாக இந்திய விமானங்கள் உணவுப் பொட்டலங்களைப் போட்டதன் பின் அங்கிருந்து தம்மை மீட்பதற்கு யாரும் வருவார்கள் என்ற மக்களின் எதிர்பார்ப்பு அதிகமாகியது. இந்திய சமாதானப் படை அங்கு சென்றதன் பின் தற்போதைய இவ் இடைக்கால அமைதி?யை, சமாதான? சூழ்நிலையை மக்கள் பெரிதும் விரும்புவவாகத் தெரிகிறது.

***ஆனல் இவ் அமைதியும் சமாதானமும் நீடிக்குமா? இருள் சூழ்ந்த எதிர்காலம் எமக்குக் காத்துக்கிடக்கிறதா? என்ற கேள்வியும் அடுத்து எழலாம்.***

## புனர் நிர்மாணப் பணிகள்:

ஈழதேச மக்களுக்கு எந்தவொரு உருப்படியான தீர்வையும் முன் வைக்காத இவ் ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ள சூழ்நிலையில் (இது எவ்வளவு தூரம் அமுல் படுத்திப்படும் என்பதும் கேள்விக்குரியதே.) நடந்து முடிந்த யுத்தத்தின் கோரத்தனங்கள் இனிமேல்தான் மக்களுக்கு முன் தெளிவாகத் தெரியப் போகிறது.

இந்த யுத்தத்தில் பல்லாயிரக் கணக்கானவர்கள் உயிர்த் தியாகம் செய்தார்கள்; சொத்துச் சேதம் கணக்கிட முடியாது; பல்லாயிரக்கணக்கானேர் அனைதைகளாக வாழ்கின்றனர். இந்நிலையில் மக்களுடைய வாழ்வைப் புனரமைத்துக் கொள்வதற்கு எம்மாலானதை ஆகக்கூடிய பட்சம் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது.

அதற்காக,

1) இப்போராட்டத்தில் இறந்த பொது மக்கள், போராளிகள், தோழர்கள் பற்றிய ஒழுங்கான புள்ளி விபரங்கள் எம்மிடம் இருக்கவேண்டும். அதனைத் திரட்டவேண்டும்.

2) அவர்களுடைய குடும்பத்தினரைச் சந்தித்து அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டி இருப்பின் செய்வதும், இல்லாவிடில் அவர்களுக்கு ஆறுதலாக இருப்பது.

3) சேதமடைந்த வீடுகள், குடிசைகளைப் புனரமைத்துக் கொடுத்தல்.

4) பாதைகள், பாலங்களைச் செப்பனிடல்,

5) நூல் நிலையங்கள், வாசிக சாலைகள் நிறுவுவதற்கு உதவுதல்.

6) சிறுவர்கள், முதியவர்கள், எழுத்தறிவற்றவர்களுக்கு கற்பிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளல்.

7) மாதிரிப் பண்ணைகள், மற்றும் மீன்பிடித்துறையிலான மாதிரிக் கூட்டுறவு அமைப்புக்களை உருவாக்கி மக்கள் மத்தியில் அவற்றை அறிமுகப்படுத்தல்.

8) சுயதொழில் வாய்ப்புக்களைச் சிறிதாக இருந்தாலும் ஏற்படுத்திக் கொடுத்தல். அதற்குரிய சாத்தியமான நிதிவளங்களைப் பெற்று உதவுதல்.

இவையே நம்முன்னுல் உள்ள புனர் நிர்மாணப் பணிகளாகும். இப்பணியில் ஒரு விரல்விட்டு எண்ணக்கூடிய தோழர்கள் முழுநேரமாக ஈடுபடவேண்டியிருக்கும். ஆனுல் ஏனைய பரந்துபட்ட பகுதியினர் பகுதி நேரமாக இப்பணியில் கண்டிப்பாக ஈடுபட வேண்டிய அவசியம் உள்ளது.

இத்தகைய வேலைகளுக்கான நிதி வசதிகளை ஸ்ரீலங்கா அரசிடமிருந்து பெறுவது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பது கேள்விக்குரியதே. நாம் எமது புத்திஜீவிகளையும், உடல் உழைப்பையும் உபயோகிப்பதோடு வசதிபடைத்தவர்களிடமும், பாதிக்கப்படாத மக்களிடமும் நிதியைப் பெறுவதற்கான அவசியமும் உண்டு. அத்தோடு யுத்தம் நடந்து சேதாரம் அடைந்த பிரதேசம் என்ற ரீதியில் சர்வதேச அளவில் எமக்குக் கிடைக்கும் உதவிகளை பணமுதலைகளின் கையில் சிக்கிவிடாமல் எவ்வாறு பயன்படுத்துவது என்பதும் முக்கியமான விடயமே.

இத்தகைய வேலைகளுக்கூடாக மாத்திரமே மக்களை தற்போதைய காலகட்டத்தில் அணிதிரட்ட இயலும். கடந்த நாலு வருட யுத்த அனுபவத்தை கொண்ட மக்கள் தம்மை யாரும் ஏமாற்றிவிட முடியாதவாறு எச்சரிக்கையாகவே இருப்பார்கள். அந்தளவிற்கு மக்களின் அரசியல் விழிப்புணர்ச்சி உடையவர்களாக இருக்கிறுர்கள் என்பது உண்மையே. **எனவே இங்கு யார் மக்களுக்கு விசுவாசமாக இருக்கிறுர்களோ, அவர்களுடன் ஐக்கியமாகிறுர்களோ, அவர்களுடைய துன்ப துயரங்களில் பங்கேற்கிறுர்களோ அவர்களே எதிர் காலத்தில் இலங்கையில் ஒரு சமூகப் புரட்சிக்கான நிலைமைகளைச் சிருஷ்டிக்க முடியும்.**

**அதிகாரப் போட்டி பற்றி :**

இப்பிரதான வேலை ஈழதேசத்தில் ஒரு புறம் இருக்க அடுத்து இங்கு உருவாகும் பிராந்திய அரசில் யார் அங்கத்துவம் வகிப்பது என்ற வேடிக்கையான குடுமி பிடிச் சண்டையில் ஆங்காங்கே சிறிது சிறிதாக முளைவிடத் தொடங்கி யுள்ளன. ஆனால் உருவாகும் பிராந்திய இடைக்கால அரசில் அங்கத்துவம் வகிக்க வேண்டிய அவசியம் இருந்தாலும் பதவிப் பித்தலாட்டங்களுக்கு இடமளிக்க முடியாது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரைப் பொறுத்த வரை அவர்களுடைய பிரச்சனைகளில் முதன்மையான விடயம் இதுவே. ஏனைய விடுதலை இயக்கங்களுக்கெதிரான ஆயுத வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டபோதும் சரி, பெங்களூர் பேச்சுவார்த்தையிலிருந்து தற்போதைய டெல்லி பேச்சு வார்த்தை வரை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஈழ தேச மக்களின் நியாய பூர்வமான உரிமைகளை வென்று கொள் வதைவிட தமக்கு ஏக பிரதி நிதித்துவம் வழங்கப்படவேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தார்கள், இருந்து வருகிறார்கள்.

இவ் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ள நிலையில் இடைக்கால பிராந்திய அரசில் அங்கத்துவம் பெறுவதற்கான முயற்சிகள், பிரயத்தனங்கள் பல்வேறு தரப்புகளிலிருந்தும் கிளப்பப்படு கிறது. இவ் ஒப்பந்தத்தில் என்னென்ன விடயங்கள் அங்கீகரிக் கப்பட்டுள்ளது; அங்கீகரிக்கப்படவில்லை என்ற தெளிவின்மை யுடன் பதவிகள் என்பதற்காக இத்தகைய சூழ்நிலை உதயமாகி யுள்ளது.

இத்தகைய சுருக்களுக்கு மத்தியில் சமூகப்புரட்சிக்கான பாதையைச் செப்பனிடுவதென்பது மிகவும் கடினமான பணி யாகும்.

**சீரழிவுக் கலாச்சாரம் :**

தவிர அகதிகளாக மேற்கத்திய நாடுகளுக்குச் சென்ற மத்தியதரவர்க்கப் பகுதியினர் நாடு திரும்பப் போகிறார்கள். ஏற்கனவே இலங்கையின் திறந்த பொருளாதாரக் கொள்கை யால் ஏற்பட்ட கலாச்சாரச் சீரழிவுகளுடன், மேற்கத்திய நாடு களிலிருந்து காவப்பட்டு வரும் சீரழிந்த கலாச்சாரத்திற்கெதி ராகவும் போராட வேண்டிய அவசியம் எமக்கு முன் உள்ளது.

போதை வஸ்துப்பாவனை, விபச்சாரம், லஞ்ச ஊழல், சீர ழிந்த இலக்கியங்கள், மினிசினிமா போன்ற ஆபத்தான

விடயங்கள் தொடர்பாக சாத்தியமான அனைத்துக்கடமைகளை யும் நாம் மேற்கொள்ளவேண்டும். **இச் சமூக அமைப்பு மாறுத வரை இப்பிரச்சனைகளுக்கு தீர்வு இல்லை என்பது தெளிவானதே. எனினும் இவற்றுக்கெதிரான போராட்டங்கள் இப்போது அவ சியமானவை. கலாச்சாரப் படையொன்றின் அவசியமும் எம்முன் உள்ளது.**

## நாடு தழுவிய சமூகப் புரட்சி :

ஸ்ரீலங்கா அரசயந்திரம் சீர்குலைந்துள்ள இன்றைய நிலையில் ஒரு சமூகப் புரட்சிக்குரிய நிலைக்கு மாறுக தெற்கில் இனவாத சக்திகள் தலைவிரித்தாடுகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளின் இனவாதமும் இதற்குக் கொஞ்சம் கூடச் சளைத்ததல்ல. இந் நிலையில் இனவாதத்திற்கெதிரான போராட்டமும், நாடு தழு விய அளவில் தொழிலாளர், விவசாயிகளை சமூகப் புரட்சிக்கு தயார்படுத்தும் கடமையும் எம்முன் உள்ளது. **ஆனால் இது விடயம் தொடர்பாக இலங்கை மக்கள் தமது சொந்தக்கரங் களையே நம்ப முடியும். ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்ட பின்னிடைவுகளுக்கு போராட்டம் சொந்தக் கரங்களில் இல்லாமல் இருந்ததும் ஒரு மிக முக்கியமான காரணி என்பதை நாம் மறந்து விடக் கூடாது.**

எனவே மலையகத்திலுள்ள தொழிற்சங்கங்களிலும், தெற் கின் தொழிற்சங்கங்களிலும் வேலை செய்வதோடு, புதிதாக தொழிலாளர், விவசாயிகளுக்கான வெகுஜன ஸ்தாபனங்களை உருவாக்க வேண்டும். மாணவர்கள், பெண்களுக்கான அமைப் புக்களுள் வேலை செய்ததும் அவை புதிதாக உருவாக்கப்பட வேண்டிய இடங்களில் உருவாக்கப்படவும் வேண்டும். அத் தோடு இவ் வேலைகள் யாவும் மையப் படுத்தப்படவேணடும். இதற்கு ஒரு புரட்சிகரக் கட்சி அவசியம். எனவே கட்சியை நோக்கியதாகவே இவ்வேலைகள் அமையமுடியும்; அமைய வேண்டும்.

இதற்கான ஊழியர்கள் பயிற்றுவிக்கப்படவேண்டிய அவ சியம் உள்ளது. ஏனையோர் தமது அன்றுடக் கடமைகளுடன் இவ்வேலைகளை மேற்கொள்ள வேண்டும்.

மற்றும் சர்வதேச நட்புறவுச் சக்திகளின் ஆதரவு இதற்கு மிக மிக அவசியம். ஆனாலும் எமது சொந்தக்கரங்கிலேயே இவ் விவகாரங்கள் பிரதானமாகத் தங்கியுள்ளன.

எனவே நாடு தழுவிய சமூகப் புரட்சியினூடாகவே ஈழ தேசமக்களின் சுயநிர்ணய உரிமையை நிலை நாட்டுவதும், இலங்கை மக்கள் அனைவருமே உண்மையான சுதந்திரத்தைப் பெறுவதும் அமைய முடியும். அவ் ஒளிமயமான எதிர்காலத்திற்காக இருள்சூழ்ந்த பாதையினூடாகவே செல்ல வேண்டிருக்கும்.

## பிற்சேர்க்கை

1. நீண்ட காலமாகவே முதலாளித்துவ அரசியல்வாதிகளால் திட்டமிட்டு வளர்க்கப்பட்ட பிரதேசவாதம் கடந்த நாலு வருட யுத்தகாலத்தில் இன்னொரு கட்ட பரிணாமத்தை அடைந்தது வேதனைக்குரிய விடயமாகும். குடாநாடு தவிர்த்த ஏனைய பிரதேசத்தில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்கள் பாரியதாக இருந்தமையும், இச்சமூகத்திலிருந்து வெறும் மத்தியதரவர்க்க உணர்வுடன் இச்சமூகத் தடைகளை அறுத்துக் கொள்ளாமல் போராட்ட அரங்கிற்கு வந்தவர்கள், நடந்து கொண்ட முறைகளும் பிரதேச வேறுபாடுகளை அதிகரிக்கச் செய்தது ஜீரணிக்க முடியாத கசப்பான உண்மையே.

2. முஸ்லீம்-தமிழ் மக்களிடையே சர்வதேச பிற்போக்குச் சக்திகளால் ஏற்படுத்தப்பட்ட விரிசலும், இச்சமூகத்தில் ஏற்கனவே ஆளும்வர்க்கத்தால் இனவாதக் குணம்சங்களுடன் போராட்ட அரங்கிற்கு வந்த இளைஞர்களால் தங்கள் பங்கிற்குமேற்கொண்ட நடவடிக்கைகளும், ஊர்காவல் படைகளின் செயற்பாடுகளும் இனக்காழ்புணர்ச்சிகளை உண்டாக்கியிருப்பதும் உண்மையே.

3. நிலப்பிரபுத்துவ மிச்ச மீதிகளாலும், தற்போதைய முதலாளித்துவ சமூகஅமைப்பினாலும்; அடிமைப்படுத்தப்பட்ட பெண்கள் போராட்டத்தில் பங்கெடுத்ததன் பின், பிற்போக்கு ஆணாதிக்க வெறியர்களால் அவர்கள் சேறு வாரித் தூற்றப்படுவதும், இச்சமூகத்திலிருந்து ஒதுக்கும் நிகழ்வுப் போக்கும் அவர்கள் ஆதரவற்றவர்களாக அலைந்து திரியும் நிலையும் இங்கு முக்கியமாக நாம் அவதானத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

4. தெற்கின் சிங்கள மக்களுக்கெதிரான குட்டி முதலாளித்துவ இனவெறிக் குழுக்களின் வெடிகுண்டுத் தாக்குதலாலும், அரசினுடைய சிங்கள மக்களின் தாய்நாட்டுப் பாதுகாப்புப் போர்வையில் உருவாக்கப்பட்ட இனவெறிக் காழ்ப்புணர்வுச் சந்தேகங்களும் யதார்த்தமானவையே.

ஏற்படப் போகும் வாக்குச் சீட்டு வியாபார அரசியலில் இவையெல்லாம் புதிய பரிணமத்தை அடைவதற்கான அபாயங்கள் உண்டு. **சாதி, பிரதேசம், இனவெறி, பெண் அடக்குமுறைக் கருத்துக்களூடாக நடைபெறப் போகும் இச்சாக்கடை அரசியலுக்கெதிராக தயவு தாட்சணிமற்ற போராட்டங்களை மேற்கொள்ள வேண்டிய கடமையும் எங்களுக்கு உண்டு என்பதை ஆழமாக மனதில் பதித்துக் கொள்ள வேண்டும்.** அவ்விடயங்களில் ஊசலாட்டமில்லாத கருத்துக்களைக் கொண்டிருந்தால் மட்டுமே சமூகப் புரட்சியை நோக்கி நாம் வெற்றிகரமாக முன்னேற முடியும்.

**"எமது அனைத்து உழைப்பும்
மக்களின் விடுதலைக்காகவே"**

இங்கு,
என்றும் உங்கள் இனிய,
தோழர் க. **பத்மநாபா**
செயலாளர் நாயகம் (S.G.).

10—9—1987

★